**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**

**ஜூலை 2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு**

**தேர்வு முடிவுகளை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் மற்றும் விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பித்தல் செய்திக்குறிப்பு**

**I. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல்:**

ஜூலை 2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு 08.07.2026 முதல் 15.07.2026 வரை நடைபெற்றன. இத்தேர்வினை மொத்தம் 66,488 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர். தற்போது, இத்தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாக **05.08.2026 ( புதன்கிழமை) பிற்பகல்** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குள் சென்று **RESULT** என்ற வாசகத்தை " Click " செய்தால் தோன்றும் பக்கத்தில் **"SSLC SUPPLEMENTARY EXAM, JULY–2026 PROVISIONAL MARK SHEET DOWNLOAD"** என்ற வாசகத்தினை " Click " செய்து தேர்வர்கள் தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதி (Date of Birth) ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**II. விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பம் செய்தல்:**

ஜூலை 2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கான விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் மேற்காண் இணையதள முகவரியில் **NOTIFICATION** பகுதியில் **SSLC Examination** என்ற வாசகத்தை " Click " செய்தால் தோன்றும் பக்கத்தில் "SSLC JULY–2026 SCAN COPY APPLICATION" என்ற வாசகத்தினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, **10.08.2026 (திங்கட்கிழமை) மற்றும் 11.08.2026** (**செவ்வாய்க்கிழமை**) ஆகிய நாட்களில் **காலை 11.00 மணி** முதல் **மாலை 5.00 மணி** வரை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும். தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மட்டும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் **விடைத்தாளின் ஒளிநகல் (Scan Copy of the Answer Script) பெறுவதற்கான கட்டணம் ரூ.275/–**தேர்வர்கள் விண்ணப்பிக்கவுள்ள அலுவலகத்தில் பணமாக செலுத்த வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக முகவரியை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியில் Press Release என்பதை Click செய்து அறிந்து கொள்ளலாம்.

**விடைத்தாள் ஒளிநகல் பெற்ற தேர்வர்களுக்கு மட்டுமே பின்னர் மறுகூட்டல் / மறுதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

விடைத்தாளின் ஒளிநகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் விடைத்தாள் ஒளிநகல் பெற்ற தேர்வர்களுக்கு மறுகூட்டல் / மறுமதிப்பீடு செய்திட விண்ணப்பிப்பதற்கான தேதி பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும்.

தேர்வர்கள் தேர்வு முடிவுகள் குறித்த ஐயங்கள் ஏதேனும் இருப்பின் 14417 என்ற உதவி மைய எண்ணைத் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவுகளை அமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் எதிர்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள் மட்டும் ஒருவரின் திறமை, ஆளுமை அல்லது எதிர்கால வெற்றியை தீர்மானிப்பவை அல்ல என்பதை மாணவர்கள் உணர வேண்டும். எதிர்பார்த்த முடிவுகள் அமையாத சூழலிலும் மனஉறுதியை இழக்காமல், எந்தவித மனஅழுத்தத்திற்கும் இடமளிக்காமல் நேர்மறை எண்ணத்துடன் முன்னேறுவது மிகவும் முக்கியமானதாகும்.

ஒவ்வொரு தேர்வருக்கும் வாழ்க்கையில் சாதிக்கும் திறனும், முன்னேறும் பல்வேறு வாய்ப்புகளும் உள்ளன. கல்விப் பயணத்தில் ஒரு முடிவு இறுதியானதல்ல; தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றிக்கான புதிய வாய்ப்புகள் நிச்சயமாக உருவாகும். தேர்ச்சி பெறாத தேர்வர்கள் தங்கள் முயற்சியினை கைவிடாமல் அடுத்து வரும் பொதுத் தேர்விற்கு தங்களை தயார் படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த காலகட்டத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அக்கறை, பொறுமை மற்றும் புரிதலுடன் ஆதரவாக இருப்பது அவசியமாகும். அதேபோல் ஆசிரியர்களும் தேர்வர்களுக்கு தேவையான வழிகாட்டுதல், ஊக்கம் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, அவர்கள் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் அடுத்தடுத்த முயற்சிகளை மேற்கொள்ள உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான ஆலோசனை உதவி எண்கள்: 14417 / 104 / 14416.

**ஒம்/-**
**இயக்குநர்**

**இடம் :** **சென்னை-600 006.**
**நாள்:** **04.08.2026**